நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 26.11.2025.

களக்காடு நகராட்சி மன்றத்தின் அவசரக் கூட்டம் 2025ம் வருடம் டிசம்பர் மாதம் 02ம் தேதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| நாள். | தீர்மான எண். | மன்ற பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 02.12.2025 | **688** | **<u>மன்றப்பொருள்: 01</u>**<br>மாண்பு மிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு 2025ல், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துரய்மை பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியம் நேரத்திற்கேற்ப மூன்று வேளையும் உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க அரசாணை (4ப) எண். 56 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள். 21.11.2025ன்படி மேற்படி திட்டத்திற்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதியில் இருந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் உரிய நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுவதுடன், இத்திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்தும் விதமாக களக்காடு நகராட்சியில் பணிபுரியும் துரய்மை பணியாளர்கள் மற்றும் சுகாதாரப்பணிகள் தொடர்பான பணியாளர்கள் என மொத்தம் 97 நபர்களுக்கு காலை உணவு மட்டும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது, அதற்கான செலவினமாக மூன்றாண்டுகளுக்கு ரூ. 6159464/- (ரூபாய் அறுபத்தோறு லட்சத்து ஐம்பத்தொண்பதாயிரத்து நானுற்று அறுபத்தி நான்கு மட்டும்) என மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறான மதிப்பீட்டு தொகைக்கும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு இச்செலவினம் முழுவததையும் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பின்படியும், அரசாணையின்படியும் சட்டப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u><br>அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம், மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சியில் துரய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்திற்கான முழு செலவினத்தையும் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.2724/2025/இ1).</td>
<td></td>
</tr>
<tr>
<td>02.12.2025</td>
<td>689</td>
<td><u>மன்றப்பொருள்: 02</u><br>நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள ஒவ்வாரு வார்டிலும் பொதுமக்கள் பங்களிப்புடன் சிறப்புக்கூட்டங்களை நடத்தி பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளில் பிரதான கோரிக்கைகளாக தலா மூன்று கோரிக்கைகளை தேர்வு செய்து அதனை செயல்படுத்த தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டதற்கிணங்க களக்காடு நகராட்சிபகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கடந்த 27.10.2025 மற்றும் 28.10.2025 அன்று நடத்தப்பட்ட சிறப்பு வார்டு சபா கூட்டங்களில் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களால் கோரப்பட்ட பிராதான கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.01, கருப்பந்தோப்பு மற்றும் கலுங்கடி பகுதிகளில் வாறுகால் வசதி செய்து தரக்கேட்டல்.</td><td>0.90</td></tr>
<tr><td rowspan="2">4</td><td>வார்டு எண்.04ல் உள்ள பொதுக்கழிப்பிடத்தை சீரமைக்கக் கேட்டல்.</td><td>4.90</td></tr>
<tr><td>வார்டு எண். 04, கீழப்பத்தை வடக்கு தெரு 4ம் சந்து மற்றும் வடகரை ஆற்றை நோக்கி செல்லும் வழியில் மின்விளக்குகள் அமைத்து தரக்கேட்டல்.</td><td>2.40</td></tr>
</table>
</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | வார்டு எண்.07, நகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியர்களுக்கு இருக்கை வசதி செய்து தரக் கேட்டல் | 1.00 | | |
| | | | | வார்டு எண்.07, கீழக்கருவேலன்குளம் வடக்குத் தெருவில் பாலத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைத்து தரக் கேட்டல். | 0.50 | | |
| | | | 8 | வார்டு எண்.08, தம்பிதோப்பு பகுதியில் வாறுகால் சீரமைக்கக் கேட்டல். | 3.00 | | |
| | | | | வார்டு எண்.08, கீழக்கருவேலன்குளம் பகுதியில் கழிப்பிடத்தை சீரமைத்தல், கிணறுக்கான மூடி அமைத்துத் தரக்கேட்டல். | 5.00 | | |
| | | | 9 | வார்டு எண்.09, சிங்கம்பத்து இந்திரா காலனியில் குடிநீர் தொட்டி பழுது சீரமைக்கக் கேட்டல். | 0.50 | | |
| | | | 10 | வார்டு எண்.10, ஜெகஜீவன்புரம் ஊர் நுழைவு பகுதியில் உள்ள குடிநீர் தொட்டி பழுது – சீரமைக்கக் கேட்டல். | 0.60 | | |
| | | | | வார்டு எண். 10, ஜெகஜீவன்புரம் பகுதியில் உள்ள வடிகால் ஓடையினை சீரமைக்கக் கேட்டல். | 0.75 | | |
| | | | 11 | வார்டு எண்.11, கருத்த பிள்ளையார் கோவில் எதிர்புறமுள்ள தெற்கு தெருவில் புதிய சின்டெக்ஸ் டேங்க் அமைக்க கேட்டல் | 3.00 | | |
| | | | 12 | வார்டு எண்.12, நகரத்தெரு சின்டெக்ஸ் டேங்க் மோட்டார் சரிசெய்யக் கேட்டல். | 1.10 | | |
| | | | 13 | வார்டு எண்.13, கக்கன்நகர் தெருவில் தெருவிளக்கு அமைக்கக் கேட்டல். | 2.00 | | |
| | | | 15 | வார்டு எண். 15, சிவருத்திரர் தெரு, மிஷன் ஸ்கூல் தெருவில் உள்ள வாறுகால் சீரமைப்பு. | 2.00 | | |
| | | | 20 | வார்டு எண்.20, பஸ்ஸ்டாண்டு கண்ணார் கோவில் மேலத்தெருவில் வாறுகால் சீரமைக்கக் கேட்டல். | 1.00 | | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">26</td><td>வார்டு எண்.26, கோவில்பத்து செட்டியார் தெருவில் வாறுகால் சீரமைத்து தரக்கேட்டல்.</td><td>1.45</td></tr>
<tr><td>வார்டு எண்.26, ஜின்னா பூங்காவை சீரமைக்கக் கேட்டல்.</td><td>3.00</td></tr>
<tr><td>27</td><td>வார்டு எண்.27, கோவில்பத்து பெரிய தெரு, தேவர் தெரு, யாதவர் தெரு, கிருஷ்ணன் கோவில் தெரு, கீழத்தெரு ஆகிய தெருக்களில் பழுதடைந்த வாறுகாலினை சீரமைக்கக் கேட்டல்.</td><td>2.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம் ரூ.</td><td>35.10</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
வார்டு அளவிலான சிறப்பு கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கைகளில் பெருமதிப்பிலான பணிகளுக்கான நிதியினை பெற அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும், குறு மதிப்பீட்டிலான மேற்கண்ட பணிகளை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். (2739/2025/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>02.12.2025</td>
<td>690</td>
<td>
<u>மன்றப்பொருள்: 03</u><br>
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு 2025ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துரய்மை பணியாளர்களுக்கு உணவு வழுங்கப்டும் என்ற அறிவிப்பிற்கிணங்க களக்காடு நகராட்சியில் பணிபுரியும் துரய்மை பணியாளர்கள், மற்றும் பொது சுகாதாரம் சார்ந்த பணிகள் தொடர்பான பணியாளர்கள் மொத்தம் 97 நபர்களுக்கு காலை உணவு வழுங்கும் திட்டத்தின் கீழ் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களது அலுவலகத்தால் 05.11.2025 அன்று வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பின் பேரில் 21.11.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி உடைய கீழ் கண்டவாறான ஒப்ந்தப்புள்ளிகளின் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.D.சக்திசீதா அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சியல் பணிபுரியும் துரய்மை பணியாளர்கள், மற்றும் பொது சுகாதாரம் சார்ந்த பணியாளர்கள் என 97 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி ( மூன்றாண்டுகளுக்கு)</td><td rowspan="2">61.59</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப், களக்காடு.</td><td>மதிப்பிட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. D. சக்தி சீதா, திருநெல்வேலி.</td><td>12.82% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம் மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை பார்வையிட்டு பதிவு செய்யலாம், குறைந்த விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
16.10.2025 அன்று நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட மன்ற பொருட்கள் மீண்டும் பரிசீலனைக்காக வைக்கப்படுகிறது.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>02.12.2025</td>
<td>691</td>
<td>
<u>மன்றப் பொருள். 04</u>
களக்காடு நகராட்சி பொதுநிதியின் கீழ் 2025-2026 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளுக்கு 07.08.2025 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">களக்காடு நகராட்சி அலுவலகத்தில் முக்கிய இடங்களில் CCTV கேமிரா மற்றும் அதன் சார்ந்த மின்னனு சாதனங்கள் சப்ளை செய்து நிறுவுதல்.</td><td rowspan="3">1.00</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>1.92% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>ஹரி டிஜிட்டல், புதுக்கோட்டை</td><td>4.04% கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>பொருள் வரிசை எண்.5ல் கண்ட பணிக்கு 12 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து இருப்பதால் சட்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்படவும். மீதம் உள்ள 1 முதல் 4 வரை உள்ள பணிகள் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.03, கீழப்பத்தையில் உள்ள பொது கிணற்றினை தூர்வாரி சீரமைக்கும் பணி.</td><td rowspan="2">1.00</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>14.49% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 6ல் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.</td><td rowspan="2">1.50</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>35.11% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>0.02% குறைவு</td></tr>
<tr><td rowspan="2">4.</td><td rowspan="2">களக்க்காடு நகராட்சி கோவில்பத்து பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான காலை உணவு திட்ட பொது சமயலறை கூடத்தில் பராமரிப்பு பணிகள்.</td><td rowspan="2">1.60</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>2.15% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>0.11% குறைவு</td></tr>
<tr><td rowspan="2">5.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.02 மஞ்சுவிளை காந்தி நகர் தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி.</td><td rowspan="2">9.00</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>0.11% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>3.42% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.</td><td></td></tr>
<tr><td>02.12.2025</td><td>692</td><td><u>மன்றப் பொருள். 05</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, கோட்டை விஸ்வகர்மா தெருவில் உள்ள சிறுபாலம் சேதம் அடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாகவும் ஆபத்தாகவும் உள்ளதால் அதனை சீர் செய்யும் பணிக்கு ரூ.75000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>இந்த பொருளுக்கு 12 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளதால், சட்டவிதிமுறைப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியமாதலால் இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>02.12.2025</td><td>693</td><td><u>மன்றப் பொருள். 06</u><br>களக்காடு நகராட்சி வார்டு எண். 07, கீழக்கருவேலன்குளம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள சிறுநீர் கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு பெற விண்ணப்பிக்கப்பட்டதில் சம்பந்தப்பட்ட மின் வாரிய கேட்புபடி ரூ.6910/- செலுத்த வேண்டியுள்ளது. இத்தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>02.12.2025</td><td>694</td><td><u>மன்றப் பொருள். 07</u><br>களக்காடு நகராட்சி பொது நிதியின் கீழ் (2025-2026) கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்.</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)</td></tr>
<tr><td colspan="3">சிறப்பு வார்டு சபா கூட்டத்தில் பெறப்பட்ட மனுவில் கோரப்பட்ட கீழ்கண்ட இரண்டு பணிகள்.</td></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.21ல் தெருவிளக்கு அமைத்தல்.</td><td>1.00</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண.19, வியாசராஜபுரம முஸ்லீம் தெற்கு தெருவில் வாறுகால் சீரமைத்தல்.</td><td>1.00</td></tr>
<tr><td colspan="3">வடகிழக்கு பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்கண்ட இரண்டு பணிகள்.</td></tr>
<tr><td>3.</td><td>களக்காடு நகராட்சிக்குட்பட்ட குடிநீர் திட்டத்தில் வடகரை சம்ப் மற்றும் சுபத்ரா பார்க்கில் உள்ள 4 எண்ணம் திரவ குளோரிநேசன் பம்புகள் மற்றும் அதனை சார்ந்த அமைப்புகள் பழுதடைந்துள்ளது. பழுதுகளை சீரமைக்கும் பணி.</td><td>3.30</td></tr>
</table></td><td>அரசு விதிப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 4. | நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளின் குடிநீர் திட்டஙகள் மற்றும் இயற்கை பேரிடர் மற்றும் இதர காரணங்களால் ஏற்படும் சிறு அளவிலான பள்ளங்கள் மற்றும் சேதங்களை உடனடியாக செப்பனிடும் பணிககாக இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டு உச்சவரம்பு நிர்ணயம் செய்து அத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18464/2023/D01, நாள்.07.10.2025–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சாலைகளில் அவ்வப்போது ஏற்படம் பழுதுகளை ஒட்டு பணியின் மூலம் சீரமைத்தல், பணிக்காக. | 5.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட அத்தியாவசிய பணிகளுக்கான மதிப்பீட்டினை ஒப்புதல் செய்யலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புக் கொள்ளலாம்.